# 2019 மார்கழி மாதத்திற்கான இறைவேண்டல் மற்றும் நடுநிலை செபத்திற்கான கைக்கொடுத்தல்

***“அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன் மேல் வெற்றி கொள்ளவில்லை.”***

***(புனித யோவான் 1:5)***

கிறிஸ்து பிறப்பு அல்லது நத்தாரை கொண்டாடுவதற்கு சகல கிறிஸ்தவ மக்களும், முழு உலகமுமே ஆயத்தமாகி கொண்டு இருக்கின்றது. முழு இயற்கையும் அதற்கு ஏற்ப புதுமையான ஒரு அழகை வெளிப்படுத்துகின்றது. உடலுக்கு தோன்றுகின்ற குளிர்ச்சி, உடல், உள்ளம், மனம், ஆன்மீகத்தையும் புத்தெழுச்சி பெற செய்கின்றது.

திருச்சபை தாயானவர் இக்காலத்தை திருவருகை காலமாக பெயரிட்டு இயேசு கிறிஸ்து நாதரின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுவதற்கு விசுவாசிகளை விழிப்புற செய்கின்றார்.

இயேசு கிறிஸ்துநாதர் உண்மையின் ஒளி என்பவராவார் என்பதையும் இருளை பாவத்தை மரணத்தை தோற்கடித்தார் என்றும் திரு விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாவத்தை மரணத்தை தோற்கடிப்பதற்கு கிறிஸ்துநாதர் இவ்வுலகிற்கு வந்தருளினார். அவரது பாடுகள், மரணம் வழியாக முழு மனித இனத்தினதும் பாவத்தையும் மரணத்தையும் அழித்தார். அவரது உயிர்ப்பின் வெற்றியானது முழு மனித இனத்திற்கும் உதயமாகியது. இம்மகா நற்செய்திக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் உள்ளாகி மற்றவர்களுக்கு தமது வாழ்வின் சாட்சியம் வழியாகவும், வார்த்தை வழியாகவும் வெளிப்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறு செய்யாவிட்டால் அக் கிறிஸ்தவன் ஒரு தரித்திரனாவான்.

இறைவேண்டலின் ஊழியர்கள் என்ற வகையில் இம்மாதம் முழுவதும் இருள் ஆட்சி செய்கின்ற சமதாயத்தினுள் கிறிஸ்துவின் ஒளியை பிரகாசிக்க செய்த ஒவ்வொரு உள்ளத்திலும் இயேசு கிறிஸ்துநாதர் பிறந்து நீதியின், நேர்மையின் நிறைந்த மதம் சார்ந்த தேசிய அமைதி சாந்தி எமது தேசத்தினுள், உலகத்தினுள் பிரகாசிக்க செய்யுமாறு உறுதியான உள்ளத்தோடு செபிப்போம்..

**“எனவே ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ!.”**

(2கொரிந்தியர் 5:17)

**முதலாம் வாரம்:- தியானவாசிப்பு – புனித யோவான் 1:1-14**
வேண்டுதலுக்கான விசேட நோக்கு

இத் திருவருகை காலத்தினுள் இயேசு கிறிஸ்துநாதர் என்ற ஒளியானவர் வழியாக எம் மக்கள் இதயங்களினுள்ளும் தேசத்தினுள்ளும் இருக்கின்ற இருள் அகன்று உண்மையான நத்தாருக்கு உள்ளாகுவதற்கு சகல மக்களுக்கும் தேவையான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை கேட்டு செபிப்போம். (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- கடந்த ஜனாதிபதி தேர்தலினால் தெரிவுசெய்யப்பட்ட புதிய ஜனாதிபதி தர்மத்திற்கு முதலிடம் கொடுத்து எமது தேசத்தை முன்நோக்கி எடுத்து செல்வதற்கு இறை ஞானம் கிடைக்குமாறு செபிப்போம்.
- சுவாமி அப்பா, நொபின்சன் விஜேசிங்க குருவானவர், இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, உள்ளிட்ட புபுதுவையில் பொறுப்பாளர்களாக பணியாற்றும் அனைவருக்கும் புபுதுவை முன்நொக்கி எடுத்து செல்வதற்கு தேவையான பரிசுத்த ஆவியானவரின் ஞானம் கிடைக்குமாறு.
- மாதத்தின் முதலாம் ஞாயிறு நடைபெறும் சங்கம குடும்பதின வழியாக கிடைத்த நற்செய்திக்கு உள்ளாகுவதற்கு சகல புபுதுவ மக்களுக்கும் தேவையான ஞானம் கிடைக்குமாறு.
- ஏனைய வேண்டுதல்கள்.........

**இரண்டாம் வாரம்:- தியானவாசிப்பு மலாக்கி 4:1-3**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :

பாவ இருளில் வாழும் அனைவருக்காகவும் எமது நாட்டின் ஜனாதிபதி கட்சி எதிர்கட்சி பாராளுமன்றத்தில் இருக்கின்ற அனைத்து அமைச்சவர்களுக்காகவும். (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- பாஸ்கா தினத்தில் ஏற்பட்ட நிகழ்வினால் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளர்கள் ஆன்மீகத்திலும் சரீரத்திலும், உள்ளத்திலும் தனிமைப்பட்டு இருக்கின்ற அனைவருக்காகவும் அவர்களை பராமரிக்கும் அனைவருக்காகவும்.
- மார்கழி மாதம் 16,17.18 தினங்களில் ஸ்ரீ பிரசங்சாரமையில் நடைபெறுகின்ற மாணவ பொறுப்பாளர்களின் ஞான ஒடுக்கிற்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்.

ஏனைய வேண்டுதல்கள்.........

**மூன்றாம் வாரம்:- தியானவாசிப்பு– 2கொரிந்தியர் 5:16-21**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு:-

வருகிற நத்தார் நாளை முன்கொண்டு ஒவ்வொரு கிறிஸ்தவனும் வெளிப்படையான … அடிமையாகாமல் உள்ளாந்திரத்தில் நத்தாருக்கு உண்மையான மனம்வருந்துதலுடன் ஆயத்தமாகுவதற்கு தேவையான பரிசுத்த ஆவியானவரின் ஒளியை வேண்டி செபிப்பொம். (20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:

- மார்கழி மாதம் 22,23,24, தினங்களில் ஸ்ரீ பிரசங்சாரமையில் நடைபெறுகின்ற நத்தார் சம்மெலனத்திற்கு பங்கு கொள்ளும் மக்களுக்காகவும் வார்த்தையின் உழியர்களுக்காகவும்.
- புபுதுவ இளைஞர் இளம்பெண்கள் பகுதிகளுக்காக.
- ஏனைய வேண்டுதல்கள்…..

**நான்காம் வாரம் :- தியானவாசிப்பு– புனித யோவான் 3:16-21**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :- தேசத்திற்காக (20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- எதிர்வரும் வருடம் ஒளிமயமான வருடமாகுவதற்காக
- ஏனைய வேண்டுதல்கள்…..

உங்கள் கவனத்திற்கு :

- மாதத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அல்லது ஒவ்வொரு புதன்கிழமையும் செபத்திலும் தியானத்திலும் கழிக்க மறக்க வேண்டாம்.
- கடந்த கார்த்திகை மாதம் 1ம் திகதி எம்மிடம் இருந்து பிரிந்து சென்ற விண்ணக வாசலை அடைந்த, 1979ம் அண்டு தொடக்கம் புபுதுவவையில் தேசிய மட்டத்திலும் சிலாப சங்கமத்திலும் தூதுப்பணி புரிந்த தொடுவாவ சங்கத்தை சேர்ந்த பிரான்சிஸ் போல் அப்பாவின் ஆன்மா இளைபாற்றிக்காக வேண்டி செபிப்போம்.

  ஆண்டவரே நித்திய இளைப்பாற்றி அளித்தருளும் முடிவில்லாத…

இறைவேண்டல் மற்றும் நடுநிலைசேவை